# விளையாட்டுக்குழு – அது என்ன?

விளையாட்டுக் குழுவில், பிள்ளைகள் மழலையர் பள்ளிக்குள் நுழைவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக வாரத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முறைகள் சந்திக்கிறார்கள். ஒரு குழுவில் 8 முதல் கூடிய அளவு 12 குழந்தைகள் வரை உள்ளனர். இங்கு முதல் முறையாக பிள்ளைகள் பெரும்பாலும் பெற்றோர்கள் அவர்களுடன் இல்லாமல் சிறிய குழுக்களாக சமூக நடத்தையையும் தங்கள் சொந்த அனுபவங்களையும் ஒரு விளையாட்டுத்தனமான முறையில் கற்றுக் கொள்கிறார்கள். பிள்ளைகள் கவனிக்கப்படுகிறார்கள், ஊக்குவிக்கப்படுகிறார்கள், ஆதரிக்கப்படுகிறார்கள், வழி நடத்தப்படுகிறார்கள். இங்கு ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்யாமல் பிள்ளைகள் சுதந்திரமாக விளையாடலாம்.

விளையாட்டுக் குழுக்கள் பிள்ளைகளின் ஒரு தீவாக இருக்கும். உங்கள் பிள்ளைகளின் உணர்வுகள் ஊக்குவிக்கப்படும் ஒரு தீவு.

விளையாட்டுக் குழுவின் நோக்கம், பிள்ளை தனது மழலையர் பள்ளி காலத்திற்கு முன்பாகவே விளையாட்டு, இயக்கம், வெளிப்பாடு, அமைதி ஆகியவற்றை அறிந்து கொள்வதாகும். விளையாட்டுக் குழு மூலமாக, பிள்ளை அதன் செயல்பாட்டுத் திறனையும், சமூக உறவு வலையமைப்பையும் விரிவாக்க முடியும்.

குழுவில் அதன் சொந்த இடத்தைக் கண்டுபிடிக்க பிள்ளை கற்றுக்கொள்கிறது; தன்னை பராமரிக்கவும், மற்றவரை கணக்கில் எடுத்துக்கொள்வதற்கும், ஒருவரை ஒருவர் பலம் மற்றும் பலவீனங்களுடன் ஏற்றுக்கொள்வதற்கும், ஒருவருக்கொருவர் உதவுவதற்கும், ஒருவருக்கொருவர் கேட்டுக் கொள்வதற்கும், அதுமட்டுமல்லாமல் வாதிட்டு பின் மீண்டும் சமாதானம் ஆவதும் குழு வாழ்க்கையின் ஒரு பகுதியாகும்.

கட்டமைப்பான விளையாட்டுக் குழு இதற்கு சிறந்த முன் உதாரணமாகும். இந்த கட்டமைப்புத்தன்மையே இதற்கும் குழந்தைகள் பராமரிப்பு சேவைக்கும் இடையேயான ஒரு முக்கியமான வித்தியாசம் ஆகும்.

மற்றவர்களால் தூண்டப்படாமலே முன்பாலர்வகுப்புப் பிள்ளைகள் தாமாகவே சுறுசுறுப்பாக இருக்க விரும்புகிறார்கள்,. எனவே, பிள்ளை பெரும்பாலும் தனது விளையாட்டுகளையும் செயல்பாடுகளையும் தானே தேர்ந்தெடுத்து தீர்மானிக்கிறது.

இந்த சுதந்திரமான விளையாட்டு செயல்பாட்டுக்கு குழுவின் பராமரிப்பாளர் ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுப்பதுடன் அதிக சுதந்திரத்தை கண்டுபிடிப்பு மற்றும் மேம்பாட்டு விருப்பங்களுக்கு வழங்குவார், ஆனால் தெளிவான கட்டுப்பாட்டு வரம்புகளும் உள்ளன.

விளையாட்டுக் குழுவில், வெவ்வேறு பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது, வர்ணம் பூசுவதற்கும், பிசைந்து விளையாடுவதற்கும், இசையாக பாடல்களும், ஒலிகளும், அசைவுகளும், அத்துடன் கதைகளும் சொல்லப்படுகின்றன. விளையாட்டுத்தனமான அனுபவம், ஆர்வமானவற்றை சோதித்துப்பார்ப்பது, ஒன்றாக இணைந்து செய்வது போன்றவை அனைத்து செயல்களினதும் மையமாக உள்ளது, ஆனால் இவை சரியான கைவினைப் பொருட்களின் உருவாக்கம் அல்ல.

வயதிற்குப் பொருத்தமான தேவைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன, அதாவது விளையாட்டுக்களுக்கும், கற்பனை வளத்துடனும், தன்னார்வத்துடன் செயற்படவும் சலுகைகள் கிடைக்கின்றன. பிள்ளைக்குத் தனது சொந்த வழிமுறையில் செயல்படவும், திரும்பப் பெறவும், அவதானிக்கவும் பங்கேற்கவும் வாய்ப்பு உள்ளது.

மழலையர் பள்ளி போல, விளையாட்டுக் குழுவிற்கு நிலையான விளையாட்டு அட்டவணை மற்றும் பாடத்திட்டம் எதுவும் கிடையாது.

## ***விளையாட்டுக் குழு பிள்ளைக்கு எதனைக் கொண்டு வருகிறது?***

விளையாட்டுக் குழுவின் பாதுகாப்பான மற்றும் நிர்வகிக்கக்கூடிய கட்டமைப்பில், குழந்தை தனது நெருங்கிய பராமரிப்பாளர்களிடமிருந்து மெதுவாக மாற்றுவதைப் பயிற்சி செய்யலாம். இது ஒரு பழக்கமற்ற சூழல், புதிய பராமரிப்பாளர் , வேறு பிள்ளைகள் போன்றவற்றைப் பழகிக் கொள்ள , அல்லது திறந்த தன்மையுடன் சுயமாக இயங்க உதவும். இது அதன் கைவேலைத் திறன், மொழியறிவு, மன, சமூக இயக்கத் திறன்களை விரிவுபடுத்துகிறது.

விளையட்டுக்குழுவில், பிள்ளை தனது தனிப்பட்ட அனுபவத்தைப் பெறுகிறார், இதனை அவர் உடன்பிறப்புகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை, மேலும் மழலையர் பள்ளி செல்கையில் குடும்பத்திலிருந்து ஒரு பெரிய குழுவிற்கு மெதுவான மாற்றம் ஏற்பட உதவலாம்.

## ***விளையாட்டுக் குழு பெற்றோருக்கு எதனைக் கொண்டு வருகிறது?***

பெற்றோர்கள் அதே வயதில் உள்ள மற்றய பெற்றோர்களுடன் விளையாட்டுக் குழு மூலம் புதிய தொடர்புகளை உருவாக்கலாம், அத்துடன் அனுபவங்களை பரிமாறிக்கொள்ளலாம். தாய்மார்கள்/தந்தையர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு தங்கள் சொந்த தேவைகளை உணர முடியும்.